பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஹு ஆவணி மீ 28 உ வியாழக்கிழமை (13-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 23 கதிர்: 193

# சத்துருக்கொண்டானில் 150 தமிழர் படுகொலை!

## செவ்வாயன்று நடந்த கொடூரம்

யாழ்ப்பாணம், செப். 13

நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) மட்டக்களப்பு மாவட்டம் சத்துருக்கொண்டான் பகுதியில் 150 அப்பாவித் தமிழர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் இருந்து இத்தகவல் தெரிய வந்தது.

மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் நான்கு மைல் தூரத்தில் உள்ளது சத்துருக்கொண்டான்.

நேற்று முன்தினம் அப்பகுதியை இராணுவம் சுற்றி வளைத்து நிற்க—

ஊருக்குள் புகுந்த முஸ்லிம் ஊர்காவற் படையினர் அகப்பட்ட அப்பாவித் தமிழர்களை வெட்டிக் கொலை செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேபகுதியில் கடந்தவார இறுதியிலும் சுமார் 50 தமிழர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு "டயர்" போட்டு எரித்ததாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ)

## வேலணையில் மக்கள் அவதி

யாழ்ப்பாணம் செப் 13

வேலணைப் பகுதியில்உள்ள ப நோ.கூ சங்க கிளைகளோ, தனியார் கடைகளிலோ உணவுப் பொருள்கள் இல்லாததால், மக்கள் பெரும் அவதிப் படுகிறார்கள்.

உணவுப் பொருள்கள் தட்டுப்பாட்டால் மக்கள் பெரும் இன்னற்படுவதாக அங்கிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார். (இ-3-6)

## பீப்பாய் குண்டினால் சுன்னாகம் அதிர்ந்தது

மயிலணி, செப். 13

செவ்வாய் நள்ளிரவு 12.15 மணியளவில் அவ்ரோ விமானம் சுன்னாகம் பகுதியிலும் பீப்பாய்க் குண்டை வீசியது.

அந்தக் குண்டு சுன்னாகம் பொற்றேல் நிலையத்துக்குப் பின்னால்உள்ள பனந்தோப்பில் விழுந்து பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இதனால் அந்தப் பகுதிமுழுவதும் அதிர்ந்தது.

இக்குண்டு வெடிப்பினால் சுற்றாடலில் உள்ள சில வீடுகள், கடைகள், தனியார்வைத்திய நிலையங்கள் சேதம் அடைந்தன. மரங்கள் பலவும் முறிந்து வீழ்ந்தன. (3ஆம் பக்கமும் பார்க்க)

(ஓ-89-15-143)

## நகரைத் தாண்டிச் செல்லும் மண்டைதீவு ஷெல்கள்!

யாழ்ப்பாணம், செப், 13

யாழ்ப்பாண நகரத்தின் மீது மட்டுமன்றி இப்போது நகரை அண்டிய பகுதிகள் மீதும் மண்டைதீவிலிருந்து ஷெல்கள் ஏவப்பட்டு வருகின்றன.

இதுவரை குருநகர், கொட்டடி, நாவாந்துறை, பொமமைவெளிப் பகுதிகளின் மீது ஏவப்பட்ட ஷெல்கள் இப்போது அரசடிவீதி, கலட்டி ஆகிய பகுதிகளுக்கும் பாய்ந்து செல்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6.15 மணியளவில் மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் [திருநெல்வேலி] கலட்டிப் பகுதியில் விழுந்தது. ஆனால் வெடிக்கவில்லை.

நேற்று நண்பகல் ஒருமணி அளவில் மண்டைதீவில் இருந்து ஏவப்பட்ட ஷெல், அரசடிவீதியில் உள்ள தஞ்சி ஒழுங்கையில் வளவு ஒன்றில் விழுந்து வெடித்தது. அதனால் அருகில் இருந்த சில வீடுகள் சேதமடைந்தன. [அ-7]

## சிப்பாய் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப்.13

மட்டக்களப்பு, சுங்கான்கேணியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றும் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (ஓ)

## காலை இழந்தார்

யாழ்ப்பாணம், செப் 13

வவுனியா சமயபுரம் அகதி முகாமில் தங்கியிருந்த எஸ் இராசேந்திரன் (வயது 30) என்ற இளைஞர் கடந்த வெள்ளியன்று வேப்பங்குளத்தில் உள்ள தமது வீட்டைப் பார்த்து வரச் சென்றபோது வீட்டின் முன்புறத்தில் கிடந்த மிதி வெடியில் சிக்கி ஒரு காலை இழந்தார். (உ-15)

## ஊரடங்கு நீங்கிய பின்னும் சந்தையில் ஹெலி வேட்டு!

யாழ்ப்பாணம், செப். 13

அரசாங்கத்துக்கும், அதன் அதிகாரிகளுக்கும் தமிழர்களைப் பற்றி, அவர்களின் உயிர்களைப் பற்றி, அவர்களின் அவலங்களைப் பற்றி எவ்வித அக்கறையும் இல்லை என்பது மேலும் மேலும் நிருபணமாகி வருகிறது

சட்டங்கள், விதிகளை தமிழ்ப் பிரதேசங்களில் அமுல் செய்வதில் ஒழுங்குமுறைஎதுவும் தேவையில்லை. என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

இது வெறும் கருத்தல்ல; அர்த்தம் நிறைந்த நடைமுறை உண்மை அதற்கு ஓர் உதாரணம்:-

ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி விமானத்தில் இருந்து வீசப்பட்ட துண்டுப் பிரசுரம் மூலம் யாழ் மாவட்டத்தில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தம் உருவாக்க ஜெயலலிதா வற்புறுத்து!

சென்னை, செப். 13

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்தத்தில் போர் நிறுத்தம் ஒன்றை அறிவிக்குமாறு இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்தவேண்டும் என்று அ.தி.மு.க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா பிரதமர் வி.பி சிங்கைக் கேட்டிருக்கிறார்.

இது சம்பந்தமாக செல்வி ஜெயலலிதா நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

போராளிகளை இலங்கை அரசுடன் பேச்சுக்களில் ஈடுபடச் செய்ய இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண இலங்கை அரசு மீது இந்தியா நிர்ப்பந்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

–இப்படி அவர் தனது அறிக்கையில் கூறியிருக்கிறார்.

## நகரை நோக்கி பீரங்கி தாக்கு; வீடு தீப்பற்றியது

யாழ்ப்பாணம், செப். 13

நேற்று கடற் பகுதியில் இருந்து யாழ். நகரை நோக்கி பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

குருநகர்ப்பகுதி கடலில் நிற்கும் பீரங்கிப் படகில் இருந்தே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சுண்டுக்குளி பகுதியிலும் நேற்று பீரங்கி ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

நேற்றிரவு 9 மணியளவில் குருசோ வீதியில் விழுந்த பீரங்கி ஷெல்லினால் வீடு ஒன்று தீப்பற்றி எரிந்தது அது உடனடியாக அணைக்கப்பட்டது.

வீட்டில் எவரும் தங்கி இருக்கவில்லை. அதனால் உயிர்ச்சேதங்கள் ஏற்பட வில்லை. (ஓ)

## அனலைதீவு மக்களின் பட்டினி வாழ்வு அவலம்

வடபகுதியில் உணவுத் தட்டுப்பாடு என்பது புதியசெய்தியல்ல. பலர் ஒரு நேரச் சாப்பாட்டுக்கும் வழியில்லாமல் பட்டினி வாழ்வு நடத்துவதும் சாதாரண தகவலாகி விட்டது.

எனினும் ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்ட தீவுகளின் நிலைமை படுமோசம்.

அனலைதீவில் உணவுப் பொருள்களைக் கண்ணால் காண்பதே அரிதாக இருக்கிறது. கூட்டுறவுச் சங்கக் கடைகள், தனியார் கடைகள் அனேகமாக வெறிச்சோடியே கிடக்கின்றன.

அனலைதீவு மக்களில் இளம் வயதினர் பெரும்பாலும் தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்று விட்டனர்.

வயதானவர்களே ஊரில் மிஞ்சியுள்ளனர்.

அனலைதீவில் ஒரு கிலோ அரிசி நாற்பது ரூபாவுக்குக் கூடுதலாக விற்பனையாகின்றது அந்த அரிசியும் வெறும் குறுணல். சஞ்சி, புக்கை மட்டுமே சமைக்கலாம் ஒரு கிலோ சீனியின் விலை 80 ரூபா. ஒரு தேங்காய்-15ரூபா.

இந்நிலையால் பலர் பட்டினி வாழ்வு நடத்துகிறார்கள்.

நிலைமை தெரியாமல் அனலைதீவு மூலம் தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்வதற்கென்று அங்கு போன வெளியூரவர்கள், ஒரு நாள் கூட அங்கு தங்க முடியாமல் திரும்பி விடுகிறார்கள். [அ-15]

## குடாநாட்டு தபால் விநியோகம் சுன்னாகம் தபாலகம் ஊடாக

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ் குடாநாட்டுக்கான தபால் விநியோகம் சுன்னாகம் தபால் நிலையத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குடாநாட்டில் உள்ள சகல தபால்நிலையங்களில் இருந்தும் சேகரிக்கப்படும் உள்ளூர்க் கடிதங்கள் சுன்னாகம் தபால் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு தரம் பிரிக்கப்பட்டு அந்தந்தத் தபால் நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

வெளியூர்களுக்கான கடிதங்கள் அங்கிருந்து கப்பலுக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன.

யாழ் பிரதம தபாலகம் இயங்க வசதி இல்லாததாலேயே சுன்னாகம் தபாலகத்தில் இந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [illegible]

## மண்கும்பான் அகதிகளுக்கு நிவாரணம் எதுவும் இல்லை

மண்கும்பான் முகாமில் தங்கியுள்ளவர்களுக்கு உதவி எதுவும் வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

மண்கும்பான் அகதி முகாமில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் தங்கியுள்ளனர்.

அவர்களுக்கு அரசாங்க அதிகாரிகள் மூலமோ அல்லது வேறு எந்த அமைப்பினாலோ இதுவரை எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. [இ-3-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து வசதிகள் இன்றி வவுனியாவில் பலரும் தவிப்பு

## சிலர் டிராக்டர், லொறிகளில் யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், செப். 13 கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் புறப்பட்ட ஏராள மாணவர்கள் வவுனியாவில் போக்குவரத்து வசதியின்றி தவம் கிடக்கிறார்கள்.

குவைத்தில் இருந்து கொழும்புக்கு விமானம் மூலம் வரும் யாழ்ப்பாணத் தவர்களுக்கு வெளிவிவகார அமைச்சு விசேட பாஸ் வழங்கி இருந்தது.

இந்தப் பாஸுடன் ரயில் மூலம் மதவாச்சிக்கு வரும் இவர்களை படையினர் இங்கு செல்ல அனுமதிக்கிறார்கள்.

''வசதியிருந்தால் யாழ்ப்பாணம் செல்லுங்கள் இல்லையேல் பாடசாலையில் உள்ள முகாமில் தங்கலாம்'' என்று படையினர் அவர்களிடம் தெரிவிக்கின்றனராம்.

போக்குவரத்து வசதி குறைவாகையால் பெரும்பாலானவர்கள் அங்கு தங்கியுள்ளனர்.

இப்படியானவர்களில் 50க்கு மேற்பட்டவர்கள் வவுனியாவுக்கு பொருள் வாங்கச் சென்ற லொறிகள் டிராக்டர்கள் மூலம் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். (இ-3)

## 15 ஆயிரம் ஆசிரியருக்கு பயிற்சி

கொழும்பு, செப். 13 பதினையாயிரம் ஆசிரியர்களுக்கு 1993 ஆம் ஆண்டு இறுதிக்குள் ஆசிரிய பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றை கல்வி அமைச்சு தயாரித்துள்ளது

ஆசிரிய பயிற்சி எதையும் பெறாத ஆசியர்களுக்கே இப் பயிற்சி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-எ)

## இலவசம்

யாழ்ப்பாணம், செப். 13 மில்க்வைற் ஸ்தாபனத்தார் இலவசமாக நாட்டுத் தேக்குக் கன்றுகளை பொது மக்களுக்கு வழங்கி வருகிறார்கள். (இ)

## பேராதனை பல்கலைமாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், செப். 13 பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு இன்னும் செல்லாமல் வடபகுதியில் தங்கி உள்ள மாணவர்களின் பெயர்களைப்பதிவு செய்யும் வேலைகள் இன்று நடைபெறுகின்றன.

இப்படியான மாணவர்கள் இன்று வியாழக்கிழமை காலை10 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் சமுகம் அளிக்குமாறு கோரப்படுகின்றனர். (இ)


# சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

சோயா தேவை தொடர்பு கொள்ளவும்: அண்ணா தொழிலகம், இணுவில். [சி/5192]

### Dilka Watch Works

யாழ் நகரில் சகல கடிகாரங்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டில்கா வாச் வேக்ஸ், மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டை. (கிராமசபைக்கு அருகாமை)
(சகல எலக்றோனிக் கடிகாரங்களுக்குரிய பற்றறிகள் விற்பனைக்குண்டு) [14158]

### இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல, 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

இராசா டீசல் என்ஜினியர்ஸ் 180, பருத்தித்துறை வீதியிலிருந்து தற்காலிகமாக 28/3 மணல் தறைலேன், கந்தர் மடம், யாழ்ப்பாணத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். (14170)

கொட்டடி விஷகடி வைத்திய நிபுணர் டாக்டர் க. சிற்றம்பலம் தற்சமயம் உடுவில்-மானிப்பாய் வீதி முதலாம் கட்டை, உடுவில் விலாசத்தில் இருந்து சேவையாற்றுகிறார். [14185]

### RATHY WATCH WORKS

மேற்படி ஸ்தாபனம் 12 பொன்னையா லேன் (உபதபால் நிலைய அருகாமையில் பிடாரி கோவிலடி) ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் இயங்குகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். இங்கு திருத்த வேலைகள் மணிக்கூடு பற்றறி, விற்பனைகள் நடைபெறுகின்றது என்பதையும் அறியத்தருகிறோம். [13937]

### தவறிவிட்டது

காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பாலேந்தரன் ஆகிய எனது அடையாள அட்டை இல. 670111202 V ஞாயிறு காலை பொம்மர் தாக்குதலின்போது அரசடி வீரசோதி சரச்சடியில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள், உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தயவாய் கேட்டுக் கொள்கிறேன். [14186]

சின்னவன் பொன்னன் இல. 393071362V இலக்கமுடைய அடையாள அட்டை ஆடி மாதம் 21ஆம் திகதி சாவகச்சேரியில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [14189]

### கோழித்தீன்

கோழித்தீன் வகைகள் கலந்தும், கோழித்தீன் மூலாதாரப் பொருட்கள் அரைத்தும் கொடுக்கப்படும். சிவா மில்ஸ் அன் இன்டஸ்றீஸ். 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [14187]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### பிள்ளையினார் நல்லதம்பி

மாதங்கள் ஒன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு என்றும் அகலாது

உங்கள் பிரிவால் வாடும்;
**மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.**

10ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (14188)

## வை. எம். சி. ஏ. யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் வை. எம். சி ஏ. கொம்சா (Homsa) திட்டத்தின் கீழ் உதவி பெறும் பிள்ளைகளின் பெற்றோர் மட்டும் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. காரியாலயத்திற்கு வந்து, தங்கள் உதவிப் பொருள்களை, இம் மாதம் 15 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன் காலை 9.00 — 12.00 மணிக்கிடையில் பெற்றுக் கொள்ளவும்.

காரியதரிசி.

[சி-5199]

## பட்டப்படிப்புகள் கல்லூரி அறிவித்தல்

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைக்கு விண்ணப்பப்படிவம் அனுப்பவேண்டிய மாணவர்கள் 14 - 09 - 90 க்கு முன்னர் தங்களது விண்ணப்பப் படிவத்தையும் வங்கி, உறுதிச் சிட்டையையும் எங்களிடம் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இ சத்தீஸ்வரன்
இயக்குநர்
உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகாமை
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
[14184]

## 7ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சுதந்திரநாயகி தேவி

இவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக (14 09 90) நாளை காலை 6 15 மணிக்கு யாழ் அர்ச். கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அனைவரையும் கலந்து கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

கணவன், பிள்ளைகள், தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர்.

''பிறைற் ஹவுஸ்''
326, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். [14192]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

திரு
### சிவசுப்பிரமணியம் இராசகுமார்
[கிளி]

தோற்றம்: 23 - 11 - 1960 மறைவு: 14 - 08 - 1990

அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், பலவழிகளில் உதவி நல்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் 13-9-1990 வியாழக்கிழமை அன்று நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

**மனைவி, தாயார், மகள், சகோதரர்கள், மாமா, மாமி. மச்சாள்மார்.**

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். [14193]

## மரண அறிவித்தல்

### திரு. சிவசாமி பொன்னுத்துரை

(ஓய்வு பெற்ற, பிரதம லிகிதர் யாழ்/மாநகரசபை, யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பலாலி வீதியில், வசிப்பவருமாகிய திரு. பொன்னுத்துரை அவர்கள் நேற்று 12 - 09 - 90 இல் காலமாகி விட்டார்.

இவர் திருமதி தங்கேஸ்வரியின் அன்புக்கணவரும் திருமதி வடிவாம்பிகை பிரேம்குமார் (U. S A) கலாநிதி தர்மாம்பிகை (பபிபா) நடேசலிங்கம் (U K), அம்பிகைபாகன் (கனடா), குகுணாம்பிகை B Sc.) (கனடா) மதிதணபாகன் (பொறியியலாளர்) (கனடா மோகனதாஸ் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வைத்திய கலாநிதி பிரேம்குமார், U S A கலாநிதி க. நடேசலிங்கம் (U K) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுரேசின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் புதன்கிழமை 12 - 09 - 90 இல் பி ப. 4 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெற்றது. என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

''அம்பிகை பவனம்''
பலாலி வீதி,
திருநெல்வேலி.

தகவல்
திருமதி தங்கேஸ்வரி பொன்னுத்துரை.
[14190]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு நேர பீப்பாய் குண்டு வீச்சு:

# நகருக்கு அப்பாலும் அனர்த்தம்

## சுன்னாகம், உரும்பராய் பகுதிகளில் சேதம்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். நகரப் பகுதியில் மூன்று தினங்களாகத் தொடர்ந்த இரவு நேர பீப்பாய்க் குண்டு வீச்சு, செவ்வாய் இரவு நான்காவது தினமாக நகருக்கு அப்பாலும் இடம் பெற்றது.

சுன்னாகத்தில் ஒரு குண்டும் உரும்பராயில் ஒரு குண்டும் விழுந்து பயங்கரசத்தத்துடன் வெடித்தன. செவ்வாய்க் கிழமை இரவு 12 30 மணிஅளவில் சுன்னாகம் சந்தைப்பகுதியில்வட்டமிட்ட அவ்ரோ விமானம் கே. கே. எஸ். வீதியிலுள்ள பெற்றோல் நிலையத்துக்கு அருகில் பீப்பாய்க் குண்டு ஒன்றைப் போட்டது. இரவில் நித்திரையில் இருந்த மக்கள் எழுந்து பதுங்குகுழிகளை நாடினர்.

குண்டு விழுந்த இடத்துக்கு அருகில் இருந்த வீடுகள் சில பலத்த சேதம் அடைந்தன. எவருக்கும் காயம் ஏற்படவில்லை. குண்டு விழுந்த இடத்துக்குச் சமீபமாக இருந்த குடிசை ஒன்று முழுதாகத் தூக்கி வீசப்பட்டது ஆனால் அதற்குள் நித்திரை செய்து கொண்டிருந்த சிறுவன் ஒருவன் தெய்வாதீனமாக உயிர் தப்பினான்.

உரும்பராய் மேற்கு பூவோடை மயானத்துக்கு சமீபமாக மற்றும் ஒரு குண்டு விழுந்து வெடித்தது.

தோட்டம் ஒன்றில் இந்தக் குண்டு விழுந்து வெடித்தபோது உருமபராய், ஊரெழு இணுவில், உடுவில் பகுதிகள் எங்கும் அதிர்ந்தன. தோட்டப் பகுதியில் சேதம் ஏற்பட்டது.எவரும் காயம் அடையவில்லை. [இ-7]

## 3 குண்டுகள் வெடிக்கவில்லை

யாழ்ப்பாணம், செப். 13

செவ்வாய்க்கிழமை இரவு யாழ். நகரில் அவ்ரோவிலிருந்து வீசப்பட்ட பீப்பாய் குண்டுகளில் 3 குண்டுகள் வெடிக்கவில்லை.

பிரவுண் வீதியில் நீராவியடிப்பிள்ளையார் கோவிலுக்கு சமீபமாக இரு ஓலைக்குடிசைகளுக்கு இடையில் விழுந்த ஒரு பீப்பாய் குண்டு வெடிக்காமல் கிடந்தது.

மற்றும் ஒரு பீப்பாய்குண்டு பெருமாள் கோவில் — நாவலர் வீதிச்சந்திக்கும் ரயில்வே தண்டவாளத்துக்கும் இடையில் சைக்கிள் கடை ஒன்றுக்குச் சமீபமாக விழுந்து வெடிக்காமல் கிடந்தது.

மூன்றாவது குண்டு ஓட்டுமடச் சந்தியில் மானிப்பாய் வீதியில் வீட்டு வளவு ஒன்றில் விழுந்து வெடிக்காமல் கிடந்தது.

வெடிக்காத பீப்பாய்குண்டுகளைப் பார்வையிட நேற்று மக்கள், பலர் அப்பகுதிகளில் திரண்டிருந்தனர். (இ-7)

### வவுனியா எல்லை முகாமில்

# லொறிகளை சோதனையிடும்

# பொறுப்பு 'நாட்டாண்மை'யிடம்

யாழ்ப்பாணம், செப். 13

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்து நிவாரணப் பொருள்களுடன் வரும் லொறிகளில் இருந்து பொருள்களை சோதனை செய்யும் பொறுப்பை படையினர் வகுப்புத்தொழிலாளர்களிடம் (தமிழ் ''நாட்டாண்மை'') ஒப்படைத்துள்ளனர்.

வவுனியா எல்லையில் உள்ள இராணுவ முகாமில் சோதனைக்காக நிறுத்தப்படும் லொறிகளில் படையினர்எந்தவித சோதனையும் நடத்துவதில்லை,

அவர்களால் ''கூலிக்கு'' அமர்த்தப்பட்டுள்ள தமிழ் 'நாட்டாண்மை' கள் லொறியில் இருந்து முழுப்பொருள்களையும் இறக்கி ஏற்றுகின்றனர். அவர்களுக்கு அதற்காக லொறிஒன்றுக்கு உரிமையாளரால் 200 ரூபா வழங்கப்பட வேண்டும்.

அவர்கள் வருபவர்களின் சூட்கேசுகளையும் சோதனையிடுகிறார்கள். அவர்கள்தான் தீப்பெட்டி, மெழுகுதிரிகளைப் பறிமுதல் செய்கிறார்கள். (இ - 3)

# 10 ஆயிரம் அகதிகளுக்கு ஒரு மாத கால நிவாரணம்

## தென்னிந்தியதிருச்சபை வழங்கியது

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். மாவட்டத்தில் 46 முகாம்களில் உள்ள 10 ஆயிரம் அகதிகளுக்கு ஒரு மாத நிவாரணமாக தென் இந்திய திருச்சபை யாழ். அத்தியட்சகர் ஆதீனம் உணவுப் பொருள்களை வழங்கியது.

உலக கிறிஸ்தவ சங்கத்தால் வழங்கப்பட்ட உதவியில் இருந்து அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா போன்றவை கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டு 11லொறிகளில் கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய். உடுவில், தெல்லிப்பழை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள அகதிகளுக்கே இந்த நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் தென் இந்திய திருச்சபை யாழ். அத்தியட்சகர் ஆதீனம் 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட பார்சல்களை கொழும்பில் உள்ள இனத்தவர்களிடம் இருந்து எடுத்து வந்து இங்கு விநியோகித்தது (இ-3)

# வியாபாரிகளாக

## மாறும் ஆசிரியர்கள்

கோப்பாய், செப்டெம்பர் 13

தற்போதைய நிலைமையினால் பலர் வியாபாரிகளாக மாறி வருகிறார்கள். அவர்களில் ஆசிரியர்கள் சிலரும் அடங்குகிறார்கள்.

சாவகச்சேரி. கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களுக்குச் சென்று சீனி, மா முதலியவற்றை வாங்கி வந்து இவர்கள் விற்பனை செய்கிறார்கள். வீதி ஓரங்களில் சிலர் தற்காலிக கடைகளையும் அமைத்துள்ளனர்.

ஆசிரியர்களது சம்பளம் காசோலைகளாக வழங்கப்பட்டு வருவதும், கடந்த மூன்றுமாத காலமாக காசோலைகளை மாற்ற முடியாதிருப்பதும் ஆசிரியர்கள் குடும்பங்களைப் பெரிதும் பாதித்து வருகிறது

காசோலைகளைப் பார்த்திருந்து பயனில்லை என்ற நிலையில் வியாபாரம் செய்து சீவியத்தை ஓட்டுகின்ற நிலை தமக்கு வந்துள்ளதாக வியாபாரம் செய்யும்ஆசிரியர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார். (இ-72)

### ஜீ. சி. ஈ. சான்றிதழ்கள்:

# தொலைத்தவர்கள் மீண்டும் அதிபர்களிடம் பெற வசதி

கொழும்பு, செப். 12

ஜீ சீ. ஈ. சாதாரணதரப் பத்திரப் பரீட்சைச் சான்றிதழ்களை இரண்டாவது முறையாகப் பாடசாலை அதிபர்கள் வழங்குவதற்குக் கல்வி அமைச்சு அனுமதி வழங்கி உள்ளது.

தற்போதைய விதிகளின்படி இப்பரீட்சையின் பெறுபேறுகள் அடங்கிய சான்றிதழ்களை அதிபர்கள் ஒருமுறை மட்டுமே வழங்கமுடியும்.

அதனைத் தொலைத்தவர்கள் பின்னர் சான்றிதழ் இன்றிக் கஷ்டப்படுவதாகக் கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே, அதிபர்கள் இரண்டாவது முறையாக அவற்றை வழங்க அனுமதிக்க முடிவு செய்யப்பட்டதாகக் கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முதல் தரம் வழங்கப்பட்ட சான்றிதழைத் தொலைத்தவர்கள் அது சம்பந்தமாக சத்தியக் கடதாசி ஒன்றைச் சமர்ப்பித்து இரண்டாவது முறையாக இனிப் பெற்றுக் கொள்ளமுடியும். (இ - எ)

# கிளிநொச்சியில் 6 ஆலைகள் மட்டுமே இயங்குகின்றன

கிளிநொச்சி, செப். 13

கிளிநொச்சிப் பகுதியில் மின்சாரம் உள்ளபோதிலும் அங்கு தற்போது ஆறு ஆலைகளே செயற்பட்டுவருகின்றன.

இங்கு முன்னர் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது சுமார் 20 க்கும் மேற்பட்ட ஆலைகள் இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டிருந்தன [இ-6]

### ஆஸ்பத்திரி:

# ஊழியர் கடமைக்குச் செல்ல செஞ்சிலுவை குறியிட்ட பஸ்

யாழ், போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் சகல தரப்பு ஊழியர்களும் கடமைக்குச் சென்று வர செஞ்சிலுவைக் குறியிட்ட பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன.

தினமும் காலை 8 மணிக்கு யாழ் கச்சேரியடியிலுள்ள செஞ்சிலுவைச் சங்க காரியாலயத்திலிருந்து புறப்படும் பஸ் நல்லூர் கந்தசுவாமி கோவில், சென்றல் நேர்ஷிங் ஹோம், யாழ். பல்கலைக் [illegible] கோவிலடி, தாவடிச்சந்தி ஆகிய இடங்களில் தரித்து ஊழியர்களைஏற்றிச்செல்லும்

மானிப்பாய் ஆஸ்பத்திரியிலிருந்து காலை 7.30 மணிக்குப் புறப்படும் வாகனம் சங்கானை வீதி, சித்தங்கேணிச் சந்தி, பண்டத்தரிப்புச் சந்தி, ஆகிய இடங்களில் தரித்து ஊழியர்களை ஏற்றிக் கொண்டு மீண்டும் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குத் திரும்பும்.

இதே வாகனம் செவ்வாய், புதன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் அளவெட்டி, மல்லாகம், சுன்னாகம், மருதனாமடம் சந்தியூடாகவும் ஊழியர்களைஏற்றிவரும்.(இ-51-5)

# கோப்பாய் உ.அ.அ. பிரிவில் நிவாரண பெர்மிட்டுகள்

கோப்பாய், செப். 13

இராணுவ நடவடிக்கை காரணமாகக் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பாதிக்கப்பட்டுத் தொழில் வருமானம் இழந்தவர்களுக்கான நிவாரண பெர்மிட்டுகள் நீர்வேலி, அச்சுவேலி ப. நோ. கூ. சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவை இன்று 13 ஆம் திகதிமுதல் ப. நோ. சங்கக் கிளைகளில் வழங்கப்படும்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. முருகேசம்பிள்ளை இதனைத் தெரிவித்தார்.

உணவுமுத்திரை வைத்திருப்பவர்கள் தமது உணவு முத்திரை உள்ள கிளைகளில் பெர்மிட்டுகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். (இ - 73)

# செய்திச் சாரம்

### பயிற்சி கலாசாலை ஆசிரியர் சம்பளம்

யாழ்ப்பாணம். செப். 13

பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஊழியர்களுக்கான 'ஆகஸ்ட்' மாத சம்பளம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவர்களுக்கான காசோலைகள் அடுத்த வாரம் கலாசாலை அதிபர்கள் மூலமாக வழங்கப்படும் என்று கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (இ-3 6)

### மட்டக்களப்புக்கு 10 ஜெனரேட்டர்கள்

மட்டக்களப்பில் மின்சார விநியோகத்தைத்தடையின்றி வழங்க பத்து ஜெனரேட்டர்களை பயன்படுத்த இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துவருகிறது. [இ-எ]

### வேலணை தபால் நிலையம் இயங்காத நிலை

யாழ்ப்பாணம், செப். 13

இராணுவ நடவடிக்கையின் போது சேதமடைந்த வேலணை தபால் நிலையம் இயங்க முடியாத நிலையில் இருந்து வருகிறது

வேலணை பகுதியில் உள்ள பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் தமது கொடுப்பனவுகளை பணமாக தற்காலிகமாக வேலணை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் இயங்கும் தபால் நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது (இ-3)

### போர்க்கால தற்பாதுகாப்பு பயிற்சி

பச்சிலைப்பள்ளி, செப். 13

பளைப்பகுதியில் கடந்த இரண்டுமாத காலமாக நடைபெற்ற முதியோருக்கான போர்க்கால தற்பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் கடந்த 7 ஆம் திகதியுடன் முடிவடைந்தன.

முப்பது பேர் பயிற்சி பெற்றனர் என்று விடுதலைப்புலிகளின் பச்சிலைப்பள்ளி அரசியல் பொறுப்பாளர் திரு செல்வராசா தெரிவித்தார். [இ-117)

### திருட்டு

யாழ்ப்பாணம், செப். 13

இடம்பெயர்ந்தோரின் வீடுகளில் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பலாலி வீதி 2 ஆம் ஒழுங்கையில் கடந்த சனிக்கிழமை இரவு திருட்டுச் சம்பவங்கள் பல இடம்பெற்றன. (இ-3)

### கப்பல் மூலம் தபால்

வாரமொரு தடவை கப்பல் மூலம் தபால்களை வெளியிடங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே போன்று கொழும்பில் இருந்து தபால்கள் கப்பல் மூலம் எடுத்து வரப்படும். [இ-3]

### தமிழீழ மீட்பு நிதி

காங்கேசன்துறை செப் 13

பளை வீமன்காமம் சிற்றூர் அவைப் பிரிவில் வதியும் மக்களின் தமிழ்ழ மீட்பு நிதிப் பங்களிப்பு தொடர்பான கூட்டம் நாளை 14ஆம் திகதி முற்பகல் 8.30 மணிக்கு தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெறும். (இ 68)

# மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை

யாழ்ப்பாணம். செப் 13

மானிப்பாய் இலங்கை வங்கிக்கிளையை மீளத் திறப்பது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இன்று 13 ஆம் திகதி காலை 9 00 மணிக்கு டைபெறுகிறது

ஊழியர்களைத் தவறாது கிளையில் சமூகம் அளிக்கும்படி வங்கி முகாமையாளர் திரு. சி என் நவரட்ணராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மகளிர் கல்லூரியில் யாழ். பிரதம தபாலகம்

யாழ்ப்பாணம், செப். 13
யாழ் - பிரதம தபாலகம் தற்காலிகமாக யாழ் - இந்து மகளிர் கல்லூரியில் இயங்குகிறது.

யாழ் - பிரதம தபாலகம் சேதமடைந்ததாலும், அங்கு கடமையாற்றக் கூடிய சூழ்நிலை இல்லாததாலும் தற்காலிகமாக இங்கு இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்த தபாலகத்தை யாழ்- பல்கலைக்கழக கட்டடத்தில் இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தபால் அதிபர் திரு. பரராஜசிங்கம் தெரிவித்தார். [இ-3-7]

# ஈச்சங்காட்டுப் பகுதியில் 2ஆம் நாளாக குண்டு வீச்சு

யாழ்ப்பாணம் செப் 13
அரியாலை ஈச்சங்காட்டுப் பகுதியில் இரண்டாவது நாளாக இரவு நேரப் பீப்பாய் குண்டு வீசப்பட்டது.

திங்கட் கிழமை இரவு 12 15 மணி அளவிலும் பின்பு செவ்வாய்க்கிழமை இரவும் அந்த இடத்துக்கு அருகே பீப்பாய் குண்டு வீசப்பட்டுள்ளது.

இருதினங்களும் பீப்பாய் குண்டு வயல்பகுதியில் வீழ்ந்ததால் சேதங்கள் ஏற்படவில்லை. [இ-3]

# வங்கிக் கிளையை திறப்பது குறித்து விரைவில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 13
'இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் கொடுக்கல் வாங்கல் வேலைகள் ஆரம்பிக்கும் திகதியை வாடிக்கையாளர்களுக்கு விரைவில் அறிவிப்போம் அது வரை வாடிக்கையாளர்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையின் உயர் அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு அறிவுரை வழங்கினார்.

இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரிக் கிளையை யாழ். பல்கலைக் கழக ஆனந்த குமாரசுவாமி விடுதியில் இயக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் —

ஆஸ்பத்திரிக் கிளையில் இருந்து ஆவணங்களை எடுப்பதில் உள்ள இடைஞ்சல்கள் நீக்கி ஆவணங்களை இங்கு எடுத்து வந்து உள்ள வேலைகளைப் பூர்த்தி செய்து வங்கியை இயக்குவோம்—

இப்படி அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார் (இ-3-7)

# கடலில் விழ்ந்த படை விமானம்

லிமா, செப் 13
பதினைந்துபேருடன் சென்ற பெருநாட்டு படை விமானம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை அத்திலாந்திக் கடலினுள் வீழ்ந்து மறைந்தது.

மோல்டாவில் இருந்து மியாமி நோக்கி விமானம் சென்று கொண்டிருந்த போதே இவ்விபத்து நிகழ்ந்தது.

காணாமற் போனவிமானத்தைத் தேடும் பணியில் பெருநாட்டு கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். (உ-எ)

## கூட்டம்

கட்டைவேலி, நெல்லியடி ப. நோ. கூ. சங்க நிதிக் கையாடல் பற்றிய விளக்கக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயற் குழு உறுப்பினர் திரு செங்கதிர் கூட்டத்தில் விளக்கம் அளிப்பார். [ஓ]

## கொக்குவில் தபாலகத்திலும்

அரசாங்கசேவை மற்றும் மாகாண சேவைக்குமான எழுதுவினைஞர்மற்றும் பதவிகளுக்குத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைகளில் தோற்றவிருப்போர் கொக்குவில் தபாலகத்திலும் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அந்தத் தபாலகத்தின் அதிபர் அறிவிக்கிறார். (ஓ-5]

## அரியாலை கிழக்குப்பகுதி மக்களுக்கு உதவி

அரியாலை கிழக்குப் பகுதியில் அல்லலுறும் அகதிகளுக்கு நேற்று முன் தினம் இரண்டு பொது அமைப்புகள் கூட்டாக உணவுப் பொருள்களை வழங்கின.

ஐக்கிய ராஜ்ய சிறுவர் பாதுகாப்பு நிதியமும், றெட்பானா அமைப்புமே அகதிகளுக்கு அவசியம் தேவையான அரிசியை வழங்கின.

மேற்படி பகுதியில் 16 முகாம்களில் — 780 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரத்து 776 பேர் தங்கியுள்ளனர். [ஓ-5]

## பாடசாலைகள் இயங்க முடியாத நிலை

மூன்றாம் தவணைக்காக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளையும் திறக்குமாறு அரசு அறிவித்திருந்தபோதும் அங்கு பாடசாலைகள் எதுவுமே திறக்கப்படவில்லை.

இங்குள்ள பாடசாலைகளில் 65 அகதிமுகாம்களாகவும், 6 இராணுவ முகாம்களாகவும் இருந்து வருவதாகவும், மாணவர்கள் அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருப்பதாகவும் தெரியவருகிறது. [ஓ-5]

## கைதான 2 தமிழர்கள் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, தாளங்குடா பகுதியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இரு தமிழர்கள் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

கடந்த 28 ஆம் திகதி கைதான வேலுப்பிள்ளை செபஸ்ரியான், கடந்த 7ஆம் திகதி கைதான [illegible] அஸ்ரின் ஆகிய இருவருமே [illegible]

# மானிப்பாய் ஆஸ்பத்திரியில் ஆய்வு கூடம் இயங்குகிறது

யாழ்ப்பாணம், செப் 13
மானிப்பாயில் இயங்கும் யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் செவ்வாய் முதல் ஆய்வு கூடம் இயங்க ஆரம்பித்துள்ளது.

மின்சாரம் மற்றும் வசதிகள் குறைவாக இருந்தபோதிலும் நோயாளரின் நலன் கருதி குறிப்பிட்ட நேரத்தில் ஆய்வுகூட வேலைகளை தொழில்நுட்பவியலாளர்கள் கவனித்து வருகின்றனர்.

ஆய்வுகூடத்திற்குத் தேவையான பல கருவிகள் இன்னமும் யாழ் நகரில் உள்ள ஆஸ்பத்திரியிலேயே இருப்பதால் அங்கிருந்து அவற்றை மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை ஆய்வுகூட உயர் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

# இடம் பெயர்ந்த அரச ஊழியருக்கு ஆகஸ்ட் சம்பள முற்பணம் இன்னும் வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம், செப் 13
வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்த அரச ஊழியர்களுக்கு ஆகஸ்ட் மாதத்துக்கான சம்பள முற்பணம் இன்னும் யாழ்-செயலகத்தால் வழங்கப்படவில்லை.

கடந்த மாதங்களில் சம்பள முற்பணமாக அவர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வந்தது.

ஆகஸ்ட் மாதச் சம்பள முற்பணம் வழங்க செயலகத்தில் பணம் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது (இ3 7)

# முக்கிய கொடுப்பனவுகளுக்கு ரூ.9 கோடி 60லட்சம் தேவை

யாழ்ப்பாணம், செப். 13
யாழ் மாவட்டத்துக்கு ஓய்வூதியம் உட்பட முக்கிய கொடுப்பனவுகளுக்காக 9 கோடி 60 லட்சம் ரூபா தேவையாக உள்ளதாக யாழ். செயலக உயர் அதிகாரி தெரிவித்தார்.

ஓய்வூதியக்காரர்களுக்கான ஆகஸ்ட மாதக் கொடுப்பனவுகளை வழங்க 3 கோடியே 60 லட்சம் ரூபாவும்—

மற்றைய சம்பளம், உணவுப் பொருள் இறக்குமதி ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகளுக்கு 6 கோடி ரூபாவும்—

அவசரமாகத் தேவையாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தப் பணத்தைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அடுத்த வாரம் அளவில் பணம் வந்து சேரும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [இ-3-7]

## ஊரடங்கு நீங்கிய---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
உடனடி ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது. அப்போது மக்களுக்கு போதிய முன்னறிவிப்பு இல்லை.

அந்த ஊரடங்கு இம்மாதம் 5 ஆம் திகதி நீக்கப்பட்டதாக நேற்று முன்தினம் 11 ஆம் திகதி) தான் அறிவிக்கப்பட்டது!

அந்த இடைப்பட்ட ஆறு நாட்களிலும், தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வாங்குவதற்காக சந்தைகளுக்கும், கடைகளுக்குச் சென்ற மக்கள் மீது பல தடவைகள், பல இடங்களில் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன!

ஊரடங்கு நீக்கம் குறித்துக் காலம் பிந்தி அறிவிக்கப்பட்ட பின்னராவது தமிழ் மக்கள் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வாங்குவதற்குச் சந்தைக்குச் செல்ல உரிமையில்லையா?

இல்லை...!

நேற்றுக் காலை 9-30 மணிக்கு திருநெல்வேலிச் சந்தைக்கு அருகில் சந்தியில் பொருள்கள் வாங்குவதற்காகக் கூடி நின்ற மக்கள் மீது ஹெலி தாக்குதல் நடத்தியது.

அதனால் மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள்!

ஊரடங்கை நீக்கியதாக அறிவித்ததன் அர்த்தம்என்ன என்று பொமக்கள் கேட்கிறார்கள்.

இதேவேளை நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் திருநெல்வேலி சிவன்கோவிலடியிலும் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது. [அ-143-7]

## புல்லுமலையில் கொடுமை

யாழ்ப்பாணம், செப். 13
மட்டக்களப்பு, புல்லுமலையில் 5 தமிழ்ப் பெண்களைக் கடந்த சனிக்கிழமை இராணுவத்தினர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி சித்திரவதை செய்ததாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ]

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி அரியகுட்டி

அனலைதீவு மூன்றாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு. சி. அரியகுட்டி 11 - 09 - 1990 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும், வள்ளியம்மை, நமசிவாயம், பார்வதி (திருவையாறு), தங்கம்மா, பரமலிங்கம் (கொழும்பு ரேடிங் கம்பனி, உரிமையாளர் யாழ் ) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் அம்பலவாணர், கந்தையா, பொன்னம்பலம், அன்னமுத்து, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்!
அ. பரமலிங்கம்.
யாழ்ப்பாணம். (14194)

## திருமதி முத்தையா செல்லம்மா

குப்பிழானைப் பிறப்பிடமாகவும், கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தையா செல்லம்மா காலமானார். இவர் கதிரித்தம்பி முத்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குப்பிழான் கந்தப்பு பொன்னம்பலம், நல்லமுத்து, அம்பலவாணர் ஆகியோரினதும், பறுவதம், கதிராசப்பிள்ளைஆகியோரினதும் அன்புச் சகோதரியும், திருமதி தவமணிதேவி நவரத்தினதின் [ஆசிரியை. இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை] சிறியதாயாரும், கதிரவேலு நவரத்தினத்தின் மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13 9.90 இன்று பிற்பகல் 12.30மணிக்கு கந்தர்மடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார். உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
ஆ. மகாலிங்கம்
உதவி அரசாங்க அதிபர்,
நல்லூர்.
38/5 மணற்தறை ஒழுங்கை,
கந்தர்மடம். [12857]

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் இரத்தினம்

[இளைப்பாறிய ஆசிரியர்]

கட்டுவனைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் வைத்திலிங்கம் இரத்தினம் அவர்கள் 12-9-90 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்றவைத்திலிங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், பகவதி [ஆசிரியை தந்தை செல்வா மகாவித்தியாலயம், தெல்லிப்பழை] அவர்களின் அன்புக் கணவரும், மாலினி, இராஜினி, பகிரதன், சிவாஜினி, சுகந்தினி, ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 13-9-90 இன்று உடுவில் றோட் மருதனார்மடத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல்எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்!
த. சிதம்பரநாதன்
[13858]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org